IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS
SC.NO. 167/2021

Deposition of Witness for P.W.5

| | |
|---|---|
| NAME | – ரம்யா |
| HUSBAND NAME | – முரேஷ் |
| VILLAGE | – |
| TALUK | – |
| CASTE | – |
| OCCUPATION | – |
| RELIGION | – |
| AGE | – |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 29.04.2024.

**Accsued A1 to A4 Present.**

நான் மேல் அரசம்பட்டு தீர்த்தம் கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.4 எனக்கு தெரியும்.அவர் என்னுடைய மாமியார். 26.04.2021 அன்று மாலை சுமார் 5லிருந்து 5.30 மணிக்கு என்னுடைய மாமனாரை பக்கத்து நிலத்துக்காரர் சுப்பிரமணியை பார்த்து மாட்டை ஒழுங்காக மேய்க்க மாட்டீர்களா எங்கள் நிலத்தில் வந்து மேய்கிறது என்று கேட்டார். சுப்பிரமணி என்னுடைய மகனை அழைத்து வருகிறேன் என்று கூறி சென்று அவரது மகன் வெங்டேசன், வல்லரசு, பாபு, தரணி, வசந்த் ஆகியோர்களை அழைத்து வந்தார்கள். என் மானாரை வெங்டேசன்

மரத்தடியால் மார்பின் மீது செத்து தொலைடா நாயே என்று சொல்லி அடித்தார். அந்த மரக்கட்டையை பிடுங்கி பாபு என் மாமானாரின் வயிற்று மீது அடித்தார். வல்லரசு என் மாமானாரின் மார்பின் காலால் எட்டி உதைத்தார். தரணி என் மாமானரின் வயிற்று மீது குத்தினார். வசந்த் என் மாமானாரின் நெஞ்சு மீது எட்டி எட்டி உதைதார். என் கணவரின் அண்ணன் வடிவேல் விலக்க சென்றார். பாபுவிடம் இருந்த கட்டையை பிடுங்கி வெங்கசேடன் என்னுடைய கணவரின் அண்ணனின் இடது முழுங்கயில் அடித்தார். என் கணவரின் அண்ணன் வடிவேலுவை பாபு வயிற்றின் மீது குத்தினார். வசந்த், தரணி, வல்லரசு ஆகிய மூவரும் என் கணவரின் அண்ணன் வயிறு மற்றும் இடுப்பு மீது எட்டி எட்டி உதைத்தார்கள். இதை பார்த்து அங்கு கறிவேப்பிலை உடைத்து கொண்டு இருந்து திருப்பதி அவரரது மனைவி சாந்தி அவர்களை விலக்கினார்கள். என் கணவருக்கு ஏற்கனவே நான் தொலைபேசி மூலம் தகவல் சொன்னதால் அவரும் அங்க வந்து விலக்கினார். இனிமே எங்கள் பேச்சுக்கு வந்தால் உன்னையும் கொல்லாமல் விடமாட்டேன் என்று என் கணவரின் அண்ணன் வடிவேலுவை பார்த்து வெங்டேசன் மிரட்டி விட்டு சென்றார். என்னுடைய கணவர் ஆம்புலன்சுக்கு தகவல் சொல்லி அவர்கள் வந்து என் மாமானாரை பரிசோதனை செய்து இறந்து விட்டதாக கூறினார்கள். என் கணவரின் அண்ணன் வடிவேலு குடியாத்தம் அரசு மருத்துமனையில் சிகிச்சை பெற்று விட்டு வேப்பங்குப்பம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இது தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

வழக்கறிஞர் ஆஜராகததால் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

P REVATHY Digitally signed by P REVATHY